முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், விழுப்புரம்
முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

S.C.No. 106-2015

PW12

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆர். இசையழகன் | மதம் | |
| த/பெ | | தொழில் | |
| கிராமம் | | வயது | |
| தாலுக்கா | | தேதி | |
| வட்டம் | | | |

( 30/06/2022 ) இன்று 1873ம் ஆண்டு சட்டம் 10ன் படி அ.சா .....12..... சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்

முதல் விசாரணை

நான் கடைசியாக விழுப்புரம் மேற்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து பணிஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2009ம் ஆண்டு நான் மேற்கு காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது விழுப்புரம் மேற்கு காவல் நிலைய குற்ற எண்.667/ 2008 என்ற வழக்கினை எனக்கு முன்னர் பணியிலிருந்த ஆய்வாளர் திரு. மணி அவர்கள் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளார். அவ்வழக்கினை அவருக்கு பின்னர் 08/03/2009ந் தேதி மேற்கு காவல் நிலையத்தில் நான் பொறுப்பேற்று 13/03/2009ந் தேதி இவ்வழக்கினை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கு கோப்பின் ரெக்கார்டுகளை பார்வையிட்டும் இவ்வழக்கின் 3வது எதிரியை பற்றி விசாரணை செய்ததில் சரியான தகவல் இல்லை. இவ்வழக்கு கோப்பினை விழுப்புரம் அரசு வழக்கு நடத்துமை உதவி இயக்குனர் அவர்களுக்கு மாதிரி குற்றப்பத்திரிக்கை அனுப்பி அதனை பெற்றும் எதிரிகள் 1 மற்றும் 2 இவர்கள் பெயரில் பிரிவுகள் 294பி, 332, 307 இதச பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். 3வது எதிரியை நீக்கியும் அறிக்கை27/07/2009 அன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். நீக்கல் அறிக்கை அதசாஆ-11.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கில் எந்த சாட்சிகளையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். நான் குற்றத்துறை உதவி இயக்குனரிடம் அனுமதி பெற்று குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறாக அனுமதி பெற்ற ஆவணம் எதுவும் நீதிமன்ற கோப்பில் இல்லையென்றால் எங்கள் கைவசம் உள்ள வழக்கு கோப்பில் உள்ளது. அந்த குற்ற நடத்துமை உதவி இயக்குனர் அனுமதி கொடுத்த ஆவணத்தில் உதவி இயக்குனர்

கையெழுத்து உள்ளது தேதி இல்லை. நான் 30/10/2009 வரை விழுப்புரம் மேற்கு காவல் நிலையத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்றேன். 25/09/2009ல் தான் இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். எப்போது வழக்கை ஜெ.எம்.1 நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. இறுதி அறிக்கை மேற்படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அன்றே 3ம் எதிரிக்கு எதிராக குறிப்பிட்டு குற்ற அறிக்கை தாக்கல் செய்யவேண்டும் என திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி நீக்கல் அறிக்கை தாக்கல் செய்த தேதி 27/07/2009 ஆகும். மேற்படி இறுதி அறிக்கையானது 27/01/2015 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ளது அந்த இறுதி அறிக்கை மற்றும் நீக்கல் அறிக்கை ஆவணத்தில் நீதிமன்ற சீல் இல்லை என்றால் சரிதான். மேற்படி நீக்கல் அறிக்கையை குற்றப்பத்திரிக்கை திருப்பப்பட்ட பிறகு தயாரித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்றம் கேட்டதற்காக நான் முன் தேதியிட்டு மேற்படி நீக்கல் அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. குற்ற இறுதி அறிக்கையில் எனது கையெழுத்து போட்ட மையிற்கும் அதன் கீழ் தேதியிலிருந்த மையிற்கும் இடையில் மை வேறுபாடு உள்ளது என்றால் அவ்வாறு வேறுபாடு தெரியவில்லை. நீதிமன்றத்தில் திருப்பப்பட்ட இறுதி அறிக்கையை மீண்டும் நீதிமன்றத்தில் 21/01/2015 அன்றுதான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிரி வழக்கு புகார்தாரர் மீதும் இதர காவலர்கள் மீதும் மனித உரிமை ஆணையத்தில் வழக்கு நடத்தியது தெரியுமா என்றால் தெரியாது. 1ம் எதிரி வழக்கு புகார்தாரர் மீதும் இதர காவலர்கள் மீதும் எ்ங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அது குற்ற எண்.70/2009 என நிலுவையில் இருந்தது என்றால் எனக்கு அது தெரியாது. அவ்வாறு குற்ற எண்.70/09 வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். 13/02/09 அன்று மேற்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் குற்றவாளிகளாக குமார் உதவி ஆய்வாளர் நகர காவல் நிலையம் காவலர் ராமலிங்கம், 20 காவலர்கள் நகர காவல் நிலையம் விழுப்புரம் என காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் உதவி காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் இருந்ததால் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்த வழக்கு விவரங்கள் பேப்பர்கள் எப்போது அனுப்பப்பட்டது என்பது எனக்கு தெரியாது. நான் மேற்படி காவல் நிலயத்தில் பணிபுரிந்தபோது மேற்படி வழக்கு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவில்லை அந்த வழக்கு பற்றி எனக்கு தெரியாது. ஒரு ஆய்வாளராக காவல் நிலையத்தில் சார்ஜ் சீட்டுகள் போடுவது சம்பந்தமாக கண்காணிக்கவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு நிலுவையில் உள்ள முதல் தகவல்அறிக்கையில் சார்ஜ் சீட்டுக்கள் போடுவது மற்றும் அதன் நிலை பற்றி கண்காணிக்கவேண்டியது ஆய்வாளர் வேலைகள். வழக்கு புகார் தேதி 23/11/2008 ஆகும். நேரம் மதியம் 02.00 மணி அதே நேரத்தில் மேற்படி ராமலிங்கம் 1ம் எதிரியிடம் வாக்குவாதம் செய்ததாக குற்ற எண்.70/2009 வழக்கில் உள்ளது. அந்த வழக்கு புகாரில் இரவு 09.00 மணிக்கு 1ம் எதிரியை அவரது வீட்டிலிருந்து இந்த வழக்கு புகார்தாரர் காவலர் ராமலிங்கம் அழைத்து வந்ததாக இருக்கிறது என்றால்

**அவ்வாறு ஆவணத்தில் இருக்கிறது. நீங்கள் உங்கள் காவலர்களுக்கு சாதகமாக செயல்பட்டு இந்த வழக்கோட புலன் விசாரணையை சரவர செய்யாமல் தவறான ஒரு குற்ற அறிக்கையை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் இந்த இறுதி அறிக்கையை தாக்கல் செய்யும்பொழுதே இந்த வழக்கின் 1ம் எதிரியின் புகார் மீது வெறும் எப்ஐஆர் நிலையிலேயே இருந்திருக்கும் என்றால் அது உதவி காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் இருந்தது. இந்த வழக்கோடு புகார்தாரர் காவலர் என்பதால் அவருக்கு ஆதரவாக செயல்பட்டு எதிரிகள் மீது பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 1ம் எதிரி தான் இந்த வழக்கின் புகார் தாரர் காவலர் ராமலிங்கம் நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் குமார் மற்றும் நகர காவல் நிலைய காவலர்களால் மிகவும் கொடுமையாக தாக்கப்பட்டார் என்று சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது. நீங்கள் வழக்கை சரிவர விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.**

**<u>மறுவிசாரணை -</u> இல்லை.**

x

| |
|---|
| சாட்சி சொல்ல சொல்ல ஆஜர் எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சர் திரு.P. ரமேஷ்பாபு என்பவருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து செய்யப்பட்டது. |

**ஒப்பம்/எஸ்.விஜயகுமார்,**
**முதன்மை உதவி அமர்வு நீதிபதி,**
**விழுப்புரம்.**